பதிவுத்துறைத்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்,சென்னை – 28
முன்னிலை: திரு.தர்மேந்திர பிரதாப் யாதவ், இ.ஆ.ப.,

எண்:29403/கே1/2009 நாள்:25.11.11

பொருள்: பணி நியமனம் - தொகுதி IV சுருக்கெழுத்துத் தட்டச்சர் நிலை III – தமிழ்நாடு அரசுப பணியாளர் தேர்வாணையம் மூலம் நியமனம் - பணிவரன்முறை – தொடர்பாக.

பார்வை: 1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் கடித எண்:3224/PSD-A/2009, நாள்:17.5.11
2. பதிவுத்துறைத்தலைவர், ஆணை எண்:29403/கே1/2009-1, நாள்:20.6.11
3. பதிவுத்துறைத்தலைவர் மே.எ.எண்:42414/கே1/08 நாள்: 24.10.2008 உடன் அரசாணை (பல்வகை) எண்:130, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் (எஸ்)துறை, நாள்: 22.07.2008

*******

**ஆணை:**

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையக் குழுவால் தொகுதி IV, 2007 தேர்வில் தேர்வு செய்யப்பட்டு பார்வை 1ல் காணும் தேர்வாணையக் கடிதம் மூலம் பதிவுத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 2ல் காணும் பதிவுத்துறைத்தலைவர் ஆணையின்படி நியமனம் அளிக்கப்பட்ட கீழ்க்காணும் சுருக்கெழுத்துத் தட்டச்சர் (நிலை III) கலம் 5ல் கண்ட தேதியில் சுருக்கெழுத்துத் தட்டச்சர் பதவியில் பணிவரன்முறை செய்யப்படுகிறார்.

| வ. எண் | பெயர் திருமதி/செல்வி | அலுவலகம் | பணியில் சேர்ந்த நாள் | பணி வரன்முறை நாள் |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | பி. பாடாலிங்கம் | பதிவுத்துறைப் பயிற்சி நிலையம், சென்னை-5 | 1.7.2011 மு.ப. | 1.7.2011 |

மேற்படி நபர் பணிவரன்முறை தேதி முதல் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி 32(எ)(1) ன்படி 3 ஆண்டுகள் தொடர்பணிக் காலத்தில் 2 ஆண்டுகள் தகுதிகாண்பருவத்தில் வைக்கப்படுகிறார்.

..2...

2) பார்வை 3ல் காணும் அரசாணைப்படி மேற்படி சுருக்கெழுத்துத் தட்டச்சர் தகுதிகாண்பருவம் முடிப்பதற்குள் தொழில் நுட்பக் கல்வித் துறையினரால் நடத்தப்படும் "Certificate Course in Computer on Office Automation" பயிற்சியை வெற்றிகரமாக முடித்தால் மட்டுமே தகுதி காண் பருவத்தை நிறைவு செய்ய இயலும். மேற்படி பயிற்சியிலிருந்து விலக்கு அளிக்க சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் பின்வரும் தகுதியை பெற்றிருக்க வேண்டும் "Degree or Diploma in Computer Science (or) Computer Engineering as one of the subjects approved by the University Grants Commission/All India Council for Technical Education/Directorate of Technical Edducation (or) an equivalent body"

3. மேற்படி சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு இதனை தெளிவுபடுத்தி உரிய சான்றிதழ்கள் பெற்று அனுப்பிடவும், பணிவரன்முறை மற்றும் தகுதிகாண்பருவம் துவக்கப்பட்டது தொடர்பாக பணிப்பதிவேட்டில் உரிய குறிப்புகள் சேர்க்குமாறும், இவ்வாணையின் நகலை சம்பந்தப்பட்ட சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு வழங்குமாறும், ஆணை கிடைக்கப் பெற்றதற்கான ஒப்புதலை உடன் அனுப்புமாறும் பதிவுத்துறைப் பயிற்சி நிலைய இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

28/11/11

பதிவுத்துறைத்தலைவருக்காக

பெறுநர்
திரு. பி. பாடாலிங்கம், சுருக்கெழுத்துத் தட்டச்சர் (நிலை III) ✓
பதிவுத்துறைப் பயிற்சி நிலையம், சென்னை-5
(பகராண்மையில் பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்)
(பதிவுத்துறைப் பயிற்சி நிலைய இயக்குநர் மூலம்)

நகல்:
1). இயக்குநர், பதிவுத்துறைப் பயிற்சி நிலையம், சென்னை-5
2). செயலாளர்,
தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை.
3). முக்கிய ஆணைக்கோப்பு/தனிநகல் 2.

மே.எ.எண் 461/பபநி/2011 நாள் 29.11.2011

ஆணை வழங்கப்படுகிறது.

[illegible] அவர்களின் ஆணையின்படி சுருக்கெழுத்து தட்டச்சர் தகுதிகாண்பருவம் முடிப்பதற்குள் தொழில் நுட்பக் கல்வித் துறையினரால் நடத்தப்படும் பயிற்சியை வெற்றிகரமாக முடிக்க அறிவுறுத்தப்படுகிறது

இயக்குநர்
பதிவுத்துறை பயிற்சி நிலையம்
சென்னை - 600 0